சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 167 | 11.12.2025 | THURSDAY | KARTHIGAI : 24 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 167 | 11.12.2025 | வியாழக்கிழமை | கார்த்திகை : 24 | விலை : ரூ.5/–

3 "100 நாள் வேலைத் திட்டத்தில் தமிழக மக்களுக்கு திமுக துரோகம்" அன்புமணி கண்டனம்

4 யுனெஸ்கோவின் கலாச்சார பாரம்பரியப் பட்டியலில் இடம்பெற்ற தீபாவளி: பிரதமர் மோடி வரவேற்பு

2 மும்மத பண்டிகைகளை பள்ளியில் கொண்டாடும், சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிக்கு சமூக ஆர்வலர்கள், பெற்றோர்கள் பாராட்டு

# "2026 தேர்தலில் 210 தொகுதிகளில் அதிமுக வெற்றி பெறும்" : பொதுக்குழு கூட்டத்தில் இபிஎஸ் பேச்சு

சென்னை: டிச.11-

அடுத்த ஆண்டு நடைபெற இருக்கிற தேர்தலில் 210 தொகுதிகளில் வெற்றி அதிமுக கூட்டணி வெற்றி பெறும் என்றும் அதிமுகவின் அழுத்தம் காரணமாகவே ரூ.1000 மகளிர் உரிமை தொகையை வழங்குகின்றனர் என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற அதிமுக பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது: தீய சக்தியான திமுகவை தமிழகத்தில் இருந்து அடியோடு அகற்றவே எம்ஜிஆர் அதிமுகவை தொடங்கினார். அமைதி, வளம், வளர்ச்சி என்ற ஜெயலலிதாவின் கொள்கையே அதிமுகவின் தாரக மந்திரம்.

நாட்டு மக்களைத்தான் எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோர் தங்களது வாரிசாகப் பார்த்தனர். சட்டப் பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்கும் தருணத்தில் முதல்வர் நடந்துகொண்ட விதம் அனைவருக்கும் தெரியும்.

சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவோடு நான் முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்ட சமயத்தில் என்னுடைய மேஜை மீது திமுகவினர் ஏறி நடனமாடினார்கள். அமைச்சர்களின் மேசை மீதும் நடனம் ஆடினார்கள். இப்படிப்பட்ட கொடுமையான நிகழ்வுகளை எல்லாம் ஏற்படுத்தியவர் இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின். அதையெல்லாம் நாம் கடந்து தான் வெற்றி பெற்றிருக்கிறோம்.

அதை எல்லாம் பொறுத்துக் கொள்ள முடியாமல் சட்டையை கிழித்துக் கொண்டு வீதியில் திரிந்தவர் தான் இன்றைய முதல்வர் ஸ்டாலின். அன்றைக்கு நீங்கள் சட்டையை கிழித்துக்கொண்டு தான் வெளியே சென்றீர்கள்.

ஆனால் அடுத்த ஆண்டு நடைபெற இருக்கிற சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக தலைமையிலான



கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும். அப்போது என்ன ஆகப் போகிறீர்களோ? 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் தனிப்பெரும்பான்மையுடன் அதிமுக ஆட்சி அமையும். அதிமுக ஆட்சி குறித்து திமுகவால் விமர்சனம் செய்ய இயலவில்லை. எனது தலைமையிலான அதிமுக ஆட்சியில் ஏதாவது குறை இருந்ததா?

சூழ்ச்சியால்தான் 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்தோம்.1991 தேர்தலில் திமுக வெறும் 2 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. 2006 தேர்தலில் மைனாரிட்டி அரசை நடத்திக்கொண்டிருந்தது திமுக. 2014 மக்களவைத் தேர்தலில் திமுகவால் ஓரிடத்தில் கூட வெற்றி பெற இயலவில்லை.

முதல்வர் ஸ்டாலின் மின் கட்டணம், வீட்டு வரி, கடை வரி என அனைத்தையும் உயர்த்தியிருக்கிறார். வரி மேல் வரி போட்டு, மக்களை வாட்டி வதைக்கிறார். அதிமுக பொற்கால ஆட்சியை கொடுத்தது. அதே ஆட்சி மீண்டும் தமிழகத்தில் வர நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

சக்கரம் சுற்றிக்கொண்டே இருக்கிறது. மேலே இருக்கிற சக்கரம் கீழே வரும். இது தெரியாமல் அதிமுக குறித்து முதல்வர் விமர்சனம் செய்வது கேலி கூத்தானது. வெறும் 2 லட்ச வாக்குகளில் 43 சட்டப்பேரவைத் தொகுதிகளை இழந்திருக்கிறோம். அடுத்த ஆண்டு நடைபெற இருக்கிற தேர்தலில் 210 தொகுதிகளில் அதிமுக கூட்டணி வெற்றி பெறும்.

திமுக பல்வேறு தேர்தல் அறிவிப்புகளை வெளியிட்டன. நிறைவேற்ற முடியாத பல திட்டங்களை அறிவித்து, கொள்ளைப் புறமாக ஆட்சிக்கு வந்தனர். கல்விக் கடனை ரத்து செய்யவில்லை, கேஸ் சிலிண்டர் மானியம் கொடுக்கவில்லை, பெட்ரோல், டீசல் விலையை குறைக்கவில்லை. நீட் தேர்வை ரத்து செய்யவில்லை, அரசு காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் எனத் தெரிவித்தனர். ஆனால் எதையும் செய்யவில்லை.

அதிமுகவின் அழுத்தம் காரணமாகவே ரூ.1000 மகளிர் உரிமைத் தொகையை வழங்குகின்றனர். தேர்தலுக்காகத் தான் விடுபட்டவர்களுக்கு மகளிர் உரிமைத் தொகை கொடுக்கிறார்கள். பெண்களின் மீது உள்ள பாசத்தால் அல்ல. போக்குவரத்து துறை உள்ளிட்ட அனைத்து துறையிலும் ஊழல் நடத்துள்ளது. திமுக அரசு பொங்கலுக்கு ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் 5,000 ரூபாய் வழங்க வேண்டும் என வேண்டுகோள் வைக்கிறோம். நிறைய ஊழல் செய்துவிட்டீர்கள், இந்த பணத்தையாவது மக்களுக்கு கொடுங்கள்.

தற்போது முதல்வர் ஸ்டாலின் மக்களின் செல்வாக்கை இழந்துவிட்டார். தேர்தல் நெருங்குவதால் மடிக்கணினி திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார்கள். 15 நாட்கள் நெல் கொள்முதல் நிலையத்தை மூடியதால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். திமுக அரசால் டெல்டா விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

தமிழகத்தில் ஊழலும் போதைப் பொருளும் அதிகரித்துள்ளது. கரோனா காலத்தில் வரியே இல்லாமல் ஓராண்டு காலம் ஆட்சியை நடத்திக் காட்டினோம். விலைவாசி தற்போது உயர்ந்துள்ளது.

திமுக ஆட்சியில் இருக்கும்நிலையில், அதன் அமைச்சர்கள் மீது ஏராளமான ஊழல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

2026 தேர்தலில் 210 இடங்களில் அதிமுக கூட்டணி வெற்றி பெறும், அதிமுக ஆட்சி அமைப்பதை எந்தக் கொம்பனாலும் தடுக்க முடியாது. உடல் உறுப்பை விற்று பிழைப்பு நடத்தக்கூடிய ஆட்சியாக இந்த ஆட்சி உள்ளது. அதிமுக ஆட்சி அமைந்தவுடன் இந்த முறைகேடு குறித்து சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படும்.



■ மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மனித உரிமைகள் உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மகாராஜ் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் உள்ளனர்.




■ உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, திண்டுக்கல் பி.எஸ்.என்.ஏ. பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற, முதலமைச்சர் தாயுமானவர் திட்டம் மற்றும் கல்வி சுய தொழில் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் உரையாற்றினார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது செல்வி ரா. கீர்த்தனா மணி, திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் வி.மூ. திருமலை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குனர் சா. சதீஸ்பாபு, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்கள் பழங்குடியினர் நல அலுவலர் பா. ராஜகுரு ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.




■ திண்டுக்கல் அரசு போக்குவரத்து கழக மண்டல அலுவலகத்தில் மனித உரிமை தின உறுதிமொழி ஏற்கப்பட்டது.

# காமராஜரை இழிவுபடுத்திய யூடியூப்பர் முக்தாரை கண்டித்து திசையன்விளையில் ஆர்ப்பாட்டம்

திசையன்விளை. டிச.11

பெருந்தலைவர் காமராஜரை பற்றி சமூக வலைதளங்களில் யூடியூப்பர் முக்தார் என்பவர் அவதூறாக பேசியதாக கூறி. தமிழகம் எங்கும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது. திசையன்விளையில் காமராஜர் நற்பணி இயக்கம் சார்பில் அதன் தலைவர் எல்ஜி. ராஜன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. காமராஜர் சிலை அருகில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் முக்தாரை கைது செய்ய வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன. இந்த ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் மறுசீரமைப்பு கமிட்டி அமைப்பாளர் விவேக் முருகன், நகர காங்கிரஸ் தலைவர் ஏவிஜே. அல்பர்ட், மாவட்ட காங்கிரஸ் ஓபிசி




பிரிவு தலைவர் லாசர், மாவட்ட துணை தலைவர் விஜய பெருமாள், மாவட்ட வர்த்தக காங்கிரஸ் செயலாளர் ஐசக், நகர காங்கிரஸ் செயலாளர் சங்கர்,காங்கிரஸ் நிர்வாகிகள் குட்டம் சிவாஜி முத்துக்குமார், ஆனைகுடி ஜெய பாண்டி, மிக்கேல் ராஜ் ,சங்கனான்குளம் வடிவேல், குமார், பாபா நர்சிங், ஆரஞ்சு முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




■ திசையன்விளை அருகில் உள்ள இட்ட மொழி புதூர் ஸ்ரீ முத்தாரம்மன் திருக்கோவிலில் திருமால் பூஜை முன்னிட்டு, மதியம் படையல் கஞ்சி படைத்து சுவாமிக்கு சிறப்பு பூஜை நடைபெற்றது. அதனை தொடர்ந்து மாலை திருவிளக்கு பூஜை நடைபெற்றது. அன்னதானம் வில்லிசை மற்றும் இரவு ஒரு மணி அளவில் சுவாமிக்கு சிறப்பு அலங்கார பூஜை நடைபெற்றது. விழாவினை திருக்கோவில் நிர்வாகம் கமிட்டி சார்பில் ஏற்பாடு செய்தனர்.

# யுனெஸ்கோ கலாசார பட்டியலில் தீபாவளி பண்டிகை



புதுடில்லி. டிச.11-

யுனெஸ்கோ அமைப்பின் கலாச்சார பாரம்பரிய பட்டியலில் தீபாவளி பண்டிகை சேர்க்கப்பட்டுள்ளது.

யுனெஸ்கோ எனப்படும் ஐ.நா., சபையின் கல்வி, அறிவியல், கலாசார அமைப்பு, பாரம்பரிய சின்னத்தின் சரித்திர காலம், கலைபடைப்புத் தன்மை உள்ளிட்ட சிறப்புகளின் அடிப்படையில், சர்வதேச பாரம்பரிய நினைவு சின்னங்களுக்கு அங்கீகாரம் வழங்கி வருகிறது.

அந்த வகையில், யுனெஸ்கோவின் கலாசார பாரம்பரிய பட்டியலில் ஹிந்துக்களின் தீபாவளிப் பண்டிகையும் சேர்க்கப்பட்டுள்ளதாக மத்திய கலாசாரத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை; இந்தியாவுக்கு ஒரு வரலாற்று சிறப்புமிக்க நாள், மனித குலத்தின் கலாசார பாரம்பரியப் பட்டியலில் தீபாவளிப் பண்டிகையும் சேர்க்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடியின் பதவி காலத்தில், இந்தியாவின் கலாசார பாரம்பரியங்களுக்கு, முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்து வருகிறது. இந்த புதிய மைல்கல்லும், அதன் பாதையை வலுப்படுத்துகிறது.

தீபாவளியைக் கொண்டாடும் நோக்கமான, நம்பிக்கை, நல்லிணக்கம் மற்றும் சமத்துவம் போன்றவற்றை உலகளவில் எடுத்துச் செல்ல இந்தக் கவுரவம் உதவுகிறது, இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

# விஜயை சந்தித்ததால் தி.மு.க., கூட்டணியில் குழப்பம் இல்லை: பிரவீன் சக்கரவர்த்தி



சென்னை, டிச.11-

"த.வெ.க., தலைவர் விஜயை சந்தித்ததில் எந்த தவறும் இல்லை; தி.மு.க., கூட்டணியிலும் குழப்பம் இல்லை," என, காங்கிரஸ் கட்சியின் தரவு பகுப்பாய்வு பிரிவு தலைவர் பிரவீன் சக்கரவர்த்தி விளக்கம் அளித்துள்ளார்.

தி.மு.க.,வுடன் தொகுதி பங்கீடு குறித்து பேச, காங்கிரசில் ஐவர் குழு அமைக்கப்பட்டு உள்ளது. அக்குழுவினரும், சென்னையில் முதல்வர் ஸ்டாலினை சந்தித்து, தொகுதி பங்கீடு குறித்து பேசியுள்ளனர். இந்நிலையில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பிரவீன் சக்கரவர்த்தி, த.வெ.க., தலைவர் விஜயை சந்தித்து பேசியுள்ளார். அப்போது, காங்கிரஸ் விரும்பும் 135 தொகுதிகள் பட்டியலை கொடுத்து, 75 சீட் கேட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த சந்திப்பு, தி.மு.க., காங்கிரஸ் கூட்டணியில் புகைச்சலை ஏற்படுத்தியுள்ளது. தி.மு.க.,வுடன் குழு அமைத்து தொகுதி பங்கீடு குறித்து பேசத் துவங்கி இருக்கும் நிலையில், தி.மு.க.,வுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருக்கும் விஜயை பிரவீன் சக்கரவர்த்தி எப்படி சந்திக்கலாம் என, காங்கிரசில் இருக்கும் தி.மு.க., ஆதரவு தலைவர்கள் கொந்தளித்தனர்.

பிரவீன் சக்கரவர்த்தி மீது கட்சி விரோத நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குரல் எழுப்பி, அதை வலியுறுத்தி கட்சித் தலைமைக்கு கடிதமும் எழுதினர். இதையடுத்து, பிரவீன் சக்கரவர்த்தி நெருக்கடிக்கு ஆளாகி உள்ளதாக கூறப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக அவர், ஆங்கில இணையதள ஊடகம் ஒன்றுக்கு, அளித்த பேட்டி:எல்லா சந்திப்புகளுக்கும் பின்னணியில், ஒரு அரசியல் திட்டம் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

இட்லி, வடை, தோசை சாப்பிடுவது போன்ற சாதாரண சந்திப்பாகவோ அல்லது திரைப்படங்கள் குறித்து பேசுவதற்கான சந்திப்பாகவோ கூட, விஜயை நான் சந்தித்திருக்கலாம். விஜயை சந்தித்ததில் எந்த தவறும் எனக்குத் தெரியவில்லை. அதேநேரம், த.வெ.க.,வில் இணையும் எண்ணமும் எனக்கு இல்லை. விஜயை சந்தித்ததால், தி.மு.க., கூட்டணியில் எந்தக் குழப்பமும் ஏற்படவில்லை. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# இரவு நேரத்தில் வாகன சோதனையில் போலீஸ்காரருக்கு நேர்ந்த சோகம்: காலையில் போன் செய்து குற்றவாளி வாக்குமூலம்



சென்னை. டிச.11-

சென்னையில் இரவு நேரத்தில் வாகன சோதனையில் கார் மோதி கான்ஸ்டபிள் மேகநாதன் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியது. காலையில் காவல் கட்டுப்பாட்டு அறைக்கு கால் செய்து கார் டிரைவர் சாய்ராம் தவறை ஒப்புக்கொண்டார். அவரை போலீசார் கைது செய்து விசாரிக்கின்றனர்.

சென்னை மடிப்பாக்கம் பகுதியில் நேற்று நள்ளிரவு 35 வயது கான்ஸ்டபிள் மேகநாதன் மற்றும் அவரது மூன்று சக போலீசார் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தார். அப்போது அந்த வழியாக வேகமாக வந்த ஒரு காரை நிறுத்தி, சோதனையில் ஈடுபட முயன்றனர். காரை ஓட்டி வந்தவர் மது போதையில், கான்ஸ்டபிள் மேகநாதன் மீது மோதிவிட்டு, அவர் காரை நிறுத்தாமல் வேகமாக சென்று விட்டார்.

இதில் மேகநாதன்,35, சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்த சம்பவம் குறித்தும், கார் டிரைவரையும் போலீசார் தேடி வந்தனர். இந்நிலையில் இன்று காலை தலைமறைவான கார் டிரைவர் சாய்ராம், காவல் துறை கட்டுப்பாட்டு அறைக்கு போன் செய்து, தனது காரில் அடிபட்டு கான்ஸ்டபிள் மேகநாதன் உயிரிழந்ததாக வாக்குமூலம் அளித்து தவறை ஒப்புக்கொண்டார்.

பள்ளிக்கரணை போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்ற, கார் டிரைவர் சாய்ராம் நடந்த சம்பவத்தை கூறி சரண்டர் ஆகியுள்ளார். இதனைத் தொடர்ந்து கார் விபத்து ஏற்படுத்திய சாய்ராம் (32) என்பவரை கைது செய்து அவர் மீது விபத்து ஏற்படுத்தி விட்டு ஓடுதல் பிரிவின் கீழ் பள்ளிக்கரணை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர். இரவு நேரத்தில் வாகன சோதனையில் கார் மோதி, கான்ஸ்டபிள் மேகநாதன் உயிரிழந்த சம்பவம் சோகத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

# சேலத்தில் பெண் தோழியை கொலை செய்த தனியார் மருத்துவமனை சிஇஓ கைது



சேலம், டிச.11-

சேலத்தில் திருமணத்துக்கு வற்புறுத்திய பெண் தோழியை கொலை செய்த தனியார் மருத்துவமனை சிஇஓவை போலீஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர். சேலம் ராமகிருஷ்ணா சாலையை சேர்ந்த பிஇ பட்டதாரி பாரதி (34), சங்கர் நகரில் உள்ள டியூஷன் சென்டரில் தங்கி பணியாற்றி வந்தார்.

பாரதியின் நண்பர் உதயசரண் (49). தனியார் மருத்துவமனையில் சிஇஓவாக பணியாற்றி வருகிறார். 2 நாட்களுக்கு முன்னர் நள்ளிரவு காட்சி சினிமாவுக்கு சென்ற இருவரும் டியூஷன் சென்டரில் தங்கினர்.

அப்போது, பாரதி மயங்கி விழுந்ததாக, உதயசரண் தான் பணியாற்றும் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தார். மருத்துவர்கள் பரிசோதனை செய்து பாரதி ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதையறிந்த பாரதியின் உறவினர்கள் உயிரிழப்பில் மர்மம் உள்ளதாகவும், இதுசம்பந்தமாக உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியதின் அடிப்படையில், அஸ்தம்பட்டி போலீஸார் மர்ம மரணம் என வழக்குப் பதிவு செய்து விசாரித்தனர்.

விசாரணை குறித்து போலீஸார் கூறியதாவது: உதயசரணுக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர். நாழிக்கல்பட்டியில் வசித்து வருகின்றனர். பாரதியுடன் தொடர்பு ஏற்பட்டு அவருடன் உதயசரண் நெருங்கி பழகியுள்ளார்.

திருமணம் செய்து கொள்ளுமாறு பாரதி அடிக்கடி வற்புறுத்தி உதயசரணுடன் தகராறில் ஈடுபட்டு வந்துள்ளார். இதற்கு உதயசரண் மறுப்பு தெரிவித்த நிலையில் மீண்டும் அவர்க ளுக்குள் தகராறு ஏற்பட்டுள்ளது.

இதில் ஆத்திரம் அடைந்த உதயசரண் பாரதியை தாக்கி கீழே தள்ளி தலையணையால் மூச்சு திணறடித்து கொலை செய்தது தெரியவந்தது. இதையடுத்து போலீஸார் கொலை வழக்காக மாற்றி உதயசரணை கைது செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மும்மத பண்டிகைகளை பள்ளியில் கொண்டாடும், சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிக்கு சமூக ஆர்வலர்கள், பெற்றோர்கள் பாராட்டு




சின்னாளபட்டி, டிச.11

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளபட்டி பைபாஸ் சாலையில் அமைந்துள்ள சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்கள் மத்தியில் மதநல்லிணக்கத்தை போற்றும். வகையில் மும்மத பண்டிகைகளை பள்ளியில் கொண்டாடி வருவதற்கு சமூக ஆர்வலர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் பாராட்டுகளை தெரிவித்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் பள்ளி பல சாதனைகளை படைத்து வரும் பள்ளியாகும். தொடர்ந்து 23 வருடங்களாக 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற பள்ளியாக பெருமை பெற்ற சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாநிலம் மற்றும் தேசிய அளவில் ஹேண்ட்பால் போட்டிகளில் சாதனை படைத்த மாணவர்களை உருவாக்கி அவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. வரும் கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது பள்ளி மாணவர்களுக்கு அரையாண்டு விடுமுறை இருப்பதால் முன்கூட்டியே பள்ளியில் கிறிஸ்துமஸ் பண்டிகையை கொண்டாடி மும்மதங்களைச் சேர்ந்த மாணவர்களை உற்சாகப்படுத்தியது. பள்ளியில் தொடர்ந்து மும்மத விழாக்களை கொண்டாடி வருவதற்கு சமூக ஆர்வலர்களும், பெற்றோர்களும் பாராட்டுகளைத் தெரிவித்துள்னர். இதுகுறித்து சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி அறங்காவலரும், பொருளாளரும், முதல்வருமான என்.திலகம் அவர்கள் கூறுகையில் எங்கள் பள்ளியில் மும்மதங்களை சேர்ந்த மாணவர்கள் படித்து வருகின்றனர். பள்ளியில் நடைபெறும் மும்மத பண்டிகைகளின் கலைநிகழ்ச்சிகளின் போது மத வேறுபாடின்றி மாணவர்களின் பெற்றோர்கள் ஆர்வமுடன் தங்கள் குழந்தைகளை கலந்து கொள்ள செய்கின்றனர். அதற்காக அவர்கள் சிறப்பு ஆடைகளையும், தங்கள் சொந்த செலவிலேயே வாங்கி கொடுத்து கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்க செய்கின்றனர். ஒவ்வொரு வருடமும், தங்கள் பிள்ளைகளை கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்க செய்யும் பெற்றோர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்றார். தொடர்ந்து பள்ளியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எங்கள் கல்வி நிறுவனத்தின் நிர்வாக அறங்காவலர் எம்.சிவக்குமார்,; அறங்காவலர்கள் ஆல்ப்ரெட் எங், பா.பாரதிராஜா, எஸ்.அபிஷேக் மற்றும் சேரன் பள்ளி, ஹேண்ட்பால் பயிற்றுநர் என்.அசோக்குமார், உடற்கல்வி ஆசிரியர் டி.செந்தில்குமார், உதவி தலைமையாசிரியை வெண்ணிலா மற்றும் அலுவலக பணியாளர்கள் மகேஸ்வரி, பிரியா, அருள்ஜோதி தலைமையிலான விழாக் கமிட்டியார்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

# உத்தரவை நிறைவேற்றாத அதிகாரிகள் மீது நடவடிக்கை



சென்னை. டிச.11-

நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றாத அதிகாரிகள் மீது, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி, தமிழக உள்துறை செயலர், டி.ஜி.பி.,க்கு, சென்னை உயர் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

சென்னை கே.கே. நகர் பகுதியைச் சேர்ந்தவர் எஸ்.பிரமீளா. இவர், ஜார்ஜ் டவுன் அய்யாசாமி முதலி இரண்டாவது சந்து பகுதியில் உள்ள சாலை ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தர விடக் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில், கடந்த 2017ல் வழக்கு தொடர்ந்தார்.

ஆக்கிரமிப்புகள் இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், சாலை ஆக்கிரமிப்பை ஆறு மாதங்களுக்குள் அகற்றும்படி, கடந்தாண்டு மார்ச் 5ல் உத்தரவிட்டது. அதை நிறைவேற்றவில்லை என, பிரமீளா நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தார்.

இந்த மனு, நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், சி.குமரப்பன் அடங்கிய அமர்வு முன், நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் விஜயன் சுப்பிரமணியன் ஆஜராகி, ''நீதிமன்றம் உத்தரவிட்டு ஓராண்டுக்கு மேல் ஆகியும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை.

''எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது, நீதிமன்ற அவமதிப்பின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும்,'' என்றார்.

அப்போது, மாநகராட்சி தரப்பில், 'ஆக்கிரமிப்பை அகற்ற பாதுகாப்பு அளிக்கக் கோரி, ஐந்து முறை போலீசுக்கு கடிதம் எழுதி உள்ளோம். போலீசார் போதிய பாதுகாப்பு அளிக்காததால், ஆக்கிரமிப்பை அகற்ற முடியவில்லை' என தெரிவிக்கப்பட்டது.

அதற்கு காவல் துறை தரப்பில், 'மாநகராட்சி தரப்பில் எழுதப்பட்ட கடிதம் தெளிவாக இல்லை' என, பதில் அளிக்கப்பட்டது.

ஒழுங்கு நடவடிக்கை இதையடுத்து, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

அரசின் இரு துறைகளுக்கு இடையே ஒத்துழைப்பு இல்லாமல் இருந்தால், அது பொது மக்களை பாதிக்கும். அனைத்து துறைகளும் ஒன்றிணைந்து செயல்படுவது என்பது நிர்வாகத்தின் அடிப்படை. எனவே, இந்த வழக்கில் உள்துறை செயலர், டி.ஜி.பி., ஆகியோரை தாமாக முன்வந்து இணைக்கிறோம்.

நீதிமன்றம் மற்றும் அரசின் உத்தரவுகளை நிறைவேற்றாத அதிகாரிகள் மீது, ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது குறித்து, அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். ஜனவரி 5ம் தேதிக்கு வழக்கு தள்ளிவைக்கப்படுகிறது. இவ்வாறு அவர்கள் உத்தரவிட்டனர்.

# கோவை செம்மொழி பூங்காவில் மக்களுக்கு அனுமதி நுழைவுக் கட்டணம் எவ்வளவு

கோவை, டிச.11-

கோவை செம்மொழிப் பூங்காவை நாளை (டிச.11) முதல் பொதுமக்கள் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கோவை மாநகராட்சி நிர்வாகம் வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கோவை காந்திபுரம் பகுதியில் ரூ.208.50 கோடி செலவில் சுமார் 45 ஏக்கர் பரப்பளவில் உலகத்தரத்தில் பல்வேறு நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப் பூங்காவை முதல்வர் ஸ்டாலின் நவம்பர் 25ம் தேதி திறந்து வைத்தார்.



பூங்காவில் நீர்வீழ்ச்சியுடன் கூடிய நுழைவு வாயில், சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள செண்பக மரம், கல் இலவு, மிளகு மரம், கடல் திராட்சை, திருவோட்டு மரம், கலிபுடா, வரி கமுகு, மலைபூவரசு எலிச்சுழி, குங்குமம் மரம், பசுமை வனம் உள்ளிட்ட பல வகையான தோட்டங்கள் 38.69 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப் பட்டுள்ளன.

பூங்காவை பொதுமக்கள் பார்வையிட டிசம்பர் 11ம் தேதி (நாளை) முதல் அனுமதி வழங்கப்படும். பொதுமக்களுக்கு நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு ஒரு நபருக்கு ரூ.15, குழந்தைகளுக்கு (10வயதிற்குட்பட்டோர்) ரூ.5, நடைபயிற்சி செய்வோருக்கு ஒரு நபருக்கு (மாதாந்திர கட்டணம்) ரூ.100, கேமராவிற்கு ரூ.25, வீடியோ கேமராவிற்கு ரூ.50, திரைப்பட ஒளிப்பதி விற்கு (நாளொன்றுக்கு) ரூ.25,000, குறும்பட ஒளிப்பதி விற்கு மற்றும் இதர ஒளிப்பதிவிற்கு ரூ.2000 என கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பூங்கா காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்படும். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "நான் தான் போரை நிறுத்தினேன்" இந்தியா, பாக். மோதல் குறித்து மீண்டும் ட்ரம்ப் கருத்து!



பென்சில்வேனியா, டிச.11-

இந்தியா பாகிஸ்தான் போரை நான் தான் நிறுத்தினேன் என்று மீண்டும் கூறியுள்ளார் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப். ஏற்கெனவே அவர் இவ்வாறாக 70 முறை கூறிவிட்டதாக விமர்சனங்கள் உள்ள நிலையில் அதை உறுதிப்படுத்துவது போலவே மீண்டும் அதனைக் கூறியுள்ளார் ட்ரம்ப்.

பென்சில்வேனியா மாகாணத்தில் நடந்த ஒரு பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசிய ட்ரம்ப் கூறியதாவது: கடந்த 10 மாதங்களில் நான் 8 போர்களை நிறுத்தியுள்ளேன். கொசோவா செர்பியா, பாகிஸ்தான் இந்தியா, இஸ்ரேல் ஈரான், எகிப்து எதியோபியா, அர்மேனியா அசர்பைஜான், கம்போடியா தாய்லாந்து போர்களை நான் நிறுத்தியுள்ளேன்.

அண்மையில் மீண்டும் கம்போடியா தாய்லாந்து இடையே புகைச்சல் ஏற்பட்டது. நான் அவர்களுக்கு போன் கால் செய்து போரை நிறுத்தச் சொல்லப்போகிறேன். இப்படித்தான் இரண்டு சக்திவாய்ந்த நாடுகள் இடையேயான போரையும் தொலைபேசியில் பேசி நிறுத்தினேன். இவ்வாறு ட்ரம்ப் கூறினார்.

காஷ்மீரில் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ம் தேதி பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக இந்தியா ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் தாக்குதல் நடத்தியது. இந்த மோதல் முற்றியது. மே 10ம் தேதி அன்று இந்தியா பாகிஸ்தான் போரை முடிவுக்குக் கொண்டுவர ஒப்புக் கொண்டதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தனது எக்ஸ் பக்கத்தில் அறிவித்தார். அதன்பின்னர் பலமுறை ட்ரம்ப் தனது தலையீட்டால் தான் இந்தியா பாகிஸ்தான் மோதல் முடிவுக்கு வந்ததாகக் கூறிவருகிறார். இந்தியாவும் அதனைத் திட்டவட்டமாக மறுத்துவருகிறது. இந்நிலையில் இப்போது மீண்டும் அதே கருத்தைக் கூறியுள்ளார் ட்ரம்ப்.

குடியேற்ற விதிகளில் கட்டுப்பாடு விதித்தது தொடர்பாக பேசிய ட்ரம்ப், "கடந்த 50 ஆண்டுகளில் முதன்முறையாக நம் நாட்டில் இப்போது 'ரிவர்ஸ் மைக்ரேஷன்' நடந்து வருகிறது. இதனால், அமெரிக்கர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு, நல்ல சம்பளம், கூடுதல் வருமானம் கிடைக்கிறது. 'சட்டவிரோத ஏலியன்களுக்கு' சென்ற வாய்ப்புகள் அமெரிக்கர்களுக்கு மடைமாறியுள்ள்து. மூன்றாம் உலக நாடுகளான ஆப்கானிஸ்தான், ஹைட்டி, சோமாலியா உள்ளிட்ட 19 நாடுகளில் இருந்து மக்கள் அமெரிக்காவுக்கு குடியேறுவதை நிரந்தரமாகத் தடுத்துள்ளேன்.

ஆம், நம் நாட்டுக்குள் நார்வே, ஸ்வீடனில் இருந்தும், டென்மார்க்கில் இருந்தும் சிலர் வரட்டுமே. சோமாலியா போன்ற அழுக்கான, அசிங்கமான, அருவருப்பான, குற்றங்கள் நிறைந்த நாடுகளில் இருந்துதான் அமெரிக்காவுக்கு வரவேண்டுமா?. நல்ல மக்கள் வரட்டும்." என்றார்.

மூன்றாம் உலக நாடுகள் எவை? 3ம் உலக நாடுகளில் இருந்து புலம்பெயர்வோருக்கு நிரந்தரத் தடை விதிக்கப்படும் என ட்ரம்ப் அண்மையில் அறி வித்தார். அமெரிக்கா, அதன் நட்பு நாடுகள், தொழில்வளர்ச்சி பெற்ற நாடுகள் முதல் உலக நாடுகள் என்று அழைக்கப்படுகின்றன. ரஷ்யா, சீனாவை சார்ந்த நாடு கள் இரண்டாம் உலக நாடுகள் என்று கூறப்படுகின்றன.

இந்த 2 அணியிலும் இல்லாத, வளர்ந்து வரும் அல்லது பின்தங் கிய ஆப்பிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகள் மூன்றாம் உலக நாடுகள் என அழைக்கப் படுகின்றன.

தற்போதைய மூன்றாம் உலக நாடுகள் பட்டியலில் ஆப்கானிஸ் தான், ஈரான், மியான்மர், காங் கோ, கியூபா, எரித்திரியா, ஹைதி, வெனிசுலா, சோமாலியா, சூடான் உள்ளிட்ட சில நாடுகள் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

# ஹெச்1பி விசா; இந்தியர்களுக்கான நேர்காணலை ஒத்திவைத்தது அமெரிக்க தூதரகம்

புதுடில்லி, டிச.11-

ஹெச் 1பி விசாவுக்கு விண்ணப்பித்துள்ள இந்தியர்களுக்கான நேர்காணலை அமெரிக்க தூதரகம் அடுத்தாண்டுக்கு ஒத்திவைப்பதாக அறிவித்துள்ளது.

வெளிநாட்டவர்களால் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாகக் கூறி, அமெரிக்காவிற்கு குடிபெயர விரும்பும் பிற நாட்டவர்களுக்கான கட்டுப்பாடுகள் மற்றும் விதிகளை அமெரிக்க அதிபர் டிரம்ப் கடுமையாக்கினார். அந்த வகையில், அமெரிக்காவில் தங்கி பணிபுரியவும், கல்வி பயில்வதற்குமான ஹெச் 1பி விசா கட்டணத்தை 89 லட்சம் ரூபாயாக அதிகரித்து உத்தரவிட்டிருந்தார். மேலும், ஹெச் 1பி விசாவுக்கு விண்ணப்பிக்கும் வழிமுறைகளையும் கடுமையாக்கப்பட்டது.

ஹெச் 1பி விசாவுக்கு விண்ணப்பிப்பவர்கள் சமூக வலைதளக் கணக்குகளை ஆய்வுக்கு உட்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ஹெச் 1பி விசாவுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணலை அடுத்தாண்டுக்கு ஒத்திவைக்கப்படுவதாக இந்தியாவுக்கான அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது. டிசம்பர் மாதத்தில் 2வது வாரம் முதல்




இம்மாத இறுதி வரையில் நேர்காணலில் பங்கேற்க இருந்தவர்களுக்கு, 2026ம் ஆண்டு மார்ச் மாதம் நேர்காணல் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணபதாரர்களின் சமூகவலைதள கணக்குகளை ஆய்வுக்கு உட்படுத்துவதற்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் அமெரிக்காவின் இறையாண்மைக்கு எதிராகவோ, பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பாகவோ கருத்துக்கள் பதிவிட்டிருந்தாலோ, ஆதரவு தெரிவித்திருந்தாலோ, அவர்களின் விசாக்கள் நிராகரிக்கப்படும்.

அண்மையில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த ஒருவர் நடத்திய துப்பாக்கிச்சூடு சம்பவத்தை தொடர்ந்து, 19 நாடுகளுக்கான விசா மற்றும் க்ரீன் கார்டு உள்ளிட்ட விண்ணப்பங்களை அமெரிக்க நிர்வாகம் நிறுத்தி வைத்துள்ளது.

# ஓசூர் பார்வதி நகரில் அடிப்படை வசதியின்றி பரிதவிக்கும் மலைக்குன்று மக்கள்!

ஓசூர், டிச.11-

ஓசூர் மாநகராட்சி 26வது வார்டுக்கு உட்பட்ட பார்வதி நகர் மலைக்குன்றில் சாலை, குடிநீர், கழிவுநீர் கால்வாய் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

ஓசூரில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு குறு மற்றும் பெரிய தொழிற்சாலைகள் உள்ளன. இங்கு பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். தமிழகத்தில் அதிவேகமாக வளர்ந்து வரும் நகராக ஓசூர் உள்ளது.

கடந்த 2019ம் ஆண்டு நகராட்சியாக இருந்த ஓசூர் அருகில் உள்ள ஊராட்சிகளை இணைத்து 45 வார்டுகளுடன் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இருப்பினும் நகரில் குடிநீர், சாக்கடை கழிவுநீர் கால்வாய், சாலை, தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகளில் மிகவும் பின்தங்கியுள்ளது. இதனால், மக்கள் பல்வேறு சிரமங்களை சந்திக்கும் நிலையுள்ளது.

இந்நிலையில், ஓசூர் 26வது வார்டுக்கு உட்பட்ட பார்வதி நகர் மற்றும் காலகுண்டா மலைக்குன்று பகுதியில் அடிப்படை வசதிகளின்றி கடந்த 40 ஆண்டுகளாக மக்கள் பரிதவித்து வருவதாகவும், குறிப்பாக மலைக்குன்றின் உயரத்தில் உள்ள 25 வீடுகளில் வசிக்கும் குடும்பத்தினர் பல்வேறு சிரமங்களை சந்திப்பதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இதுதொடர்பாக அப்பகுதி பொதுமக்கள் கூறியதாவது: கடந்த 40 ஆண்டுகளாக பார்வதி நகர் மலைக்குன்று மீது 2,000க்கும் மேற்பட்டோர் வசித்து வருகிறோம். எங்கள் பகுதியில் சீரான



குடிநீர் கிடைப்பதில்லை.

தெருக்களில் சேரும் குப்பைக் கழிவுகள் முறையாக அள்ளப்படுவதில்லை. சாக்கடை கழிவுநீர் கால்வாய் இல்லாததால், மழைக் காலங்களில் கழிவுநீர் வீடுகளில் புகுந்து விடுகிறது. இந்த நீர் வடிய பல நாட்கள் ஆகும் என்பதால், சுகாதாரமற்ற நிலை இருந்து வருகிறது.

பொது கழிப்பறை இல்லாததால் பலரும் திறந்தவெளிகளை பயன்படுத்துவதால் நோய் தொற்று பரவும் அபாயம் உள்ளது. பாதை வசதியில்லாததால் கரடு முரடான குன்று பாதையில் செல்ல தினசரி பள்ளிக்கு செல்லும் மாணவ, மாணவிகள் சிரமத்தை சந்தித்து வருகின்றனர்.

ரேஷன் கடை இல்லாததால் மலையிலிருந்து கீழே இறங்கிப் பொருட்களை வாங்க முதியவர்கள் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர். இப்பகுதியில் பட்டா இல்லாதவர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆனால், முறையாக பயனாளிகளுக்கு வந்து சேரவில்லை. எனவே, எங்கள் மலைக்குன்றை மாநகராட்சி ஆணையர் ஆய்வு செய்து, சீரான குடிநீர், சாலை மற்றும் இறக்கமான பகுதிகளில் படிக்கட்டு, சாக்கடை கால்வாய், தெருவிளக்கு, கழிப்பறை, ரேஷன் கடை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்

# விளையாட்டு துறையை ஊக்குவிப்பதில் சிறந்த மாநிலமாக தமிழகத்துக்கு சிஐஐ விருது வழங்கி கவுரவிப்பு

சென்னை, டிச.11-


விளையாட்டு துறையை ஊக்குவிப்பதில் சிறந்து விளங்கும் மாநிலமாக அங்கீகரித்து தமிழகத்துக்கு சிஐஐ விருது வழங்கி கவுரவித்துள்ளது.

இந்திய தொழில் கூட்டமைப்பு (சிஐஐ) சார்பில் விளையாட்டு துறையில் சிறந்து விளங்கும் சாதனையாளர்களை அங்கீகரிக்கும் வகையில் 'சிஐஐ விளையாட்டு வர்த்தக விருதுகள்' வழங்கும் நிகழ்ச்சி டெல்லியில் நேற்று நடைபெற்றது.

இதில், விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு மிகச்சிறந்த பங்களிப்பை வழங்கும் மாநிலமாக தமிழகம் தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கான விருதை, தமிழக அரசின் விளையாட்டு துறை செயலர் அதுல்ய மிஸ்ரா பெற்றுக் கொண்டார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி உடனிருந்தார். இந்நிகழ்ச்சியில் அதுல்ய மிஸ்ரா பேசியது: இந்த அங்கீகாரத்தை வழங்கிய இந்தியத் தொழில் கூட்டமைப்புக்கும், மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்துக்கும் நன்றி.

சமூக நீதியை நிலைநாட்டுவதற்கான ஒரு முக்கிய கருவியாக விளையாட்டைக் கருதும் முதல்வர் மு.க.ஸ்டாலினின்



தொலைநோக்குப் பார்வைக்கு இந்த விருதை சமர்ப்பிக்கிறேன்.

உலகத்தரத்தில் போட்டிகள்: அதேபோல், மாநிலத்தில் இளைஞர்களின் அடையாளமாய் திகழும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கும் இந்த விருதை சமர்ப்பிக்கிறேன். அவரது தலைமையின் கீழ், தமிழகத்தில் உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டு, விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சிறப்பான வசதிகள் செய்து தரப்படுகின்றன.

இன்றைக்கு ஜூனியர் ஹாக்கி உலகக்கோப்பை, ஸ்குவாஷ் உலக சாம்பியன்ஷிப் போட்டி போன்ற உலகத்தரம் வாய்ந்த விளையாட்டுப் போட்டிகள் தமிழகத்தில் நடத்தப்படுகின்றன. இந்த மாற்றங்களுக்கு முக்கிய பங்காற்றிய தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டிக்கும் எனது பாராட்டுகள். இவ்வாறு அவர் பேசினார்.

# "100 நாள் வேலைத் திட்டத்தில் தமிழக மக்களுக்கு திமுக துரோகம்" அன்புமணி கண்டனம்

சென்னை, டிச.11-

"தமிழகத்தில் 4 மாதங்களில் வழங்கி முடிக்கப் பட்டிருக்க வேண்டிய சராசரி 16 நாட்கள் வேலையை 9 மாதங்களுக்கு இழுத்து வழங்கியதன் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு பெரும் துரோகத்தை திமுக செய்து விட்டது. மேலும் தும்பை விட்டு வாலை பிடிப்பதைப் போல இப்போது தான் கூடுதல் வேலை நாட்கள் கோரி மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது." என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு: தமிழ்நாட்டுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 12 கோடி வேலைநாள்கள் முடிவடைந்து விட்ட நிலையில், இனி யாருக்கும் வேலை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு ஆண்டுக்கு 150 நாள்கள் வேலை வழங்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்த திமுக, சராசரியாக 16 நாள்கள் மட்டுமே வேலை வழங்கியிருப்பது கண்டிக்கத்தக்கது.

மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் தமிழ்நாட்டுக்கு 12 கோடி மனித வேலை நாள்கள் மட்டும் தான் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதற்கான அறிவிப்பு கடந்த பிப்ரவரி மாதம் நிதிநிலை அறிக்கையில் வெளியான போதே இது போதுமானதல்ல என்றும், கடந்த காலங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவுக்கு நடப்பாண்டிலும் வேலை வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினேன்.

ஆனால், தமிழகத்தை ஆளும் முதல்வர் மு.க.ஸ்டாலின் இது குறித்து எந்த அக்கறையும் காட்டவில்லை. அதன் விளைவாகவே மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 12 கோடி மனித வேலை நாள்களும் கடந்த டிசம்பர் 7ம் தேதியுடன்



முடிந்து விட்டன. இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்த நிதி முழுமையாக தீர்ந்து விட்ட நிலையில், இனி யாருக்கும் வேலை வழங்க முடியாது. ஒருவேளை வேலை வழங்கப்பட்டாலும் அதற்கான நிதி மத்திய அரசிடமிருந்து கிடைக்குமா? என்பது தெரியவில்லை.

நடப்பாண்டில் மத்திய அரசு ஒதுக்கிய நிதியைக் கொண்டு தமிழக அரசு எத்தனை நாள்களுக்கு வேலை வழங்கியிருக்கிறது தெரியுமா? சராசரியாக வெறும் 16 நாள்கள் மட்டுமே வேலை வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் பணி செய்வதற்காக மொத்தம் 85.73 லட்சம் குடும்பங்கள் பதிவு செய்துள்ள நிலையில், அவர்களில் 74.93 லட்சம் குடும்பங்கள் தொடர்ந்து வேலை செய்து வருகின்றன. ஆனால், அவர்களில் வெறும் 52.45 லட்சம் குடும்பங்களுக்கு மட்டும் தான் நடப்பாண்டில் திமுக அரசு வேலை வழங்கியுள்ளது. மீதமுள்ள 23 லட்சம் குடும்பங்களுக்கு ஒரே ஒரு நாள் கூட வேலை வழங்கப்படவில்லை.

அதுமட்டுமின்றி, 5,539 குடும்பங்களுக்கு மட்டுமே 100 நாள் வேலை வழங்கப்பட்டுள்ளது. 2023 24ம் ஆண்டில் 4 லட்சம் குடும்பங்களுக்கும் 100 நாள்கள் வேலை வழங்கப்பட்ட நிலையில், நடப்பாண்டில் அதில் 80-இல் ஒரு பங்கினருக்கு மட்டுமே 100 நாள்கள் வேலை வழங்கப்பட்டுள்ளது. ஊரக மக்களின் வறுமையை போக்கி, வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் இத்திட்டத்தை திமுக அரசு செயல்படுத்தும் லட்சனம் இது தான்.

2021 ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையில், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்படி ஆண்டுக்கு 150 நாட்கள் வேலை வழங்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதில் பத்தில் ஒரு பங்கு அளவுக்கு, சராசரியாக 16 நாட்கள் மட்டுமே வேலை வழங்கப்பட்டுள்ளது. அதைவிடக் கொடுமை என்னவென்றால், தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் வேலை நாட்களை 150 ஆக உயர்த்த வலியுறுத்தி மத்திய அரசை சட்டப்பூர்வமாகவோ, அரசியல்பூர்வமாகவோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது தான்.

நடப்பு நிதியாண்டின் 9 மாதங்கள் நிறைவடையவுள்ள நிலையில், மத்திய அரசு ஒதுக்கிய நிதி முழுமையாக தீர்ந்து விட்ட நிலையில் இப்போது தான் கூடுதல் வேலைநாள்களை ஒதுக்கீடு செய்யக் கோரி மத்திய அரசுக்கு திமுக அரசு கடிதம் எழுதியுள்ளது. கூடுதலாக 9 கோடி வேலை நாள்களை வழங்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் திமுக அரசு கோரியுள்ளது. அந்தக் கோரிக்கை ஏற்கப்படுமா? என்பது தெரியவில்லை.

ஒரு வேளை அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டாலும் கூட அதன் மூலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 12 நாட்கள் மட்டும் தான் கூடுதலாக கிடைக்கும். இது திமுக அளித்த வாக்குறுதியான 150 நாட்களில் ஐந்தில் ஒரு பங்கு கூட கிடையாது. அவ்வளவு ஏன்?... முந்தைய அதிமுக ஆட்சியின் கடைசி ஆண்டில் வழங்கப்பட்ட 50.22 நாள்களில் கிட்டத்தட்ட பாதியாக மட்டும் தான் இருக்கும். இது தானா திமுக அரசின் சாதனை?

தமிழ்நாட்டுக்கு நடப்பாண்டில் வெறும் 12 கோடி மனித வேலைநாட்கள் மட்டுமே வழங்கப்பட்டது பெரும் அநீதி. அதை ஏற்றுக்கொள்ளவே முடியாது என்பதை பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து கூறி வருகிறது. 2020 21 ஆண்டில் 33.39 கோடி, 2021 22ம் ஆண்டில் 34.57 கோடி, 2022 23ம் ஆண்டில் 33.46 கோடி, 2023 24 ஆண்டில் 40.87 கோடி, 2024 25 ஆண்டில் 30.61 கோடி நாள்கள் வேலை வழங்கப்பட்ட நிலையில், அவற்றில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே நடப்பாண்டில் வேலை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என்பது மனிதத் தேவையின் அடிப்படையிலானது ஆகும். கடந்த ஆண்டுகளில் 40 கோடி மனித வேலைநாட்கள் வரை தமிழ்நாட்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், நடப்பாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 12 கோடி மனித வேலைநாட்கள் 4 மாதங்களுக்குக் கூட போதுமானது அல்ல என்பதை திமுக அரசு உணர்ந்து கொண்டு, கூடுதல் வேலைநாட்களை ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசை வலியுறுத்தியிருக்க வேண்டும்.

ஆனால், அதை செய்யாமல், 4 மாதங்களில் வழங்கி முடிக்கப் பட்டிருக்க வேண்டிய சராசரி 16 நாட்கள் வேலையை 9 மாதங்களுக்கு இழுத்து வழங்கியதன் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு பெரும் துரோகத்தை திமுக செய்து விட்டது. மேலும் தும்பை விட்டு வாலை பிடிப்பதைப் போல இப்போது தான் கூடுதல் வேலை நாள்கள் கோரி மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது.

திமுக அரசின் அலட்சியத்தால் தமிழ்நாட்டு மக்கள் பாதிக்கப்படக்கூடாது. ஊரக மக்களுக்கு வேலை வழங்குவதில் முக்கியப் பங்கு வகிக்கும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் தமிழ்நாட்டு மக்களின் வாழ்வில் வளம் சேர்க்கும் திட்டமாகவே தொடர வேண்டும். அதை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாட்டுக்கு நடப்பாண்டில் கூடுதலாக 12 கோடி நாட்கள் வேலை வழங்க மத்திய அரசு முன்வர வேண்டும். இவ்வாறு அன்புமணி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# காவிரி வைகை குண்டாறு திட்டத்தை நிறைவேற்றக் கோரி சென்னையில் விவசாயிகள் பேரணி

சென்னை, டிச.11-

காவிரிவைகை குண்டாறு திட்டத்தை விரைந்து நிறைவேற்றக் கோரி விவசாயிகள் சென்னையில் பேரணி நடத்தினர். காவிரிவைகை குண்டாறு திட்டத்துக்கு போதிய நிதி ஒதுக்கி, திட்டத்தை நிறைவேற்றக் கோரி அகில இந்திய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் சார்பில் சென்னையில் நேற்று பேரணி நடைபெற்றது.

எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் தொடங்கிய பேரணி, தெற்கு கூவம் சாலை வழியாக லாங்க்ஸ் கார்டன் சாலையில் முடிவடைந்தது. இதில் 300க்கும் மேற்பட்ட விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

பேரணிக்கு விவசாய சங்கத் தலைவர் கோவிந்தராஜு தலைமை வகித்தார். பின்னர், செய்தியாளர்களிடம் சங்க செயலாளர் சுருளியாண்டவர் கூறியதாவது: திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு எழுவனம்பட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள 15 கிராமங்களுக்கு வைகை சோத்துப்பாறை மஞ்சளாறு உபரி நீரை கிளை வாய்க்கால்கள் அமைத்து பாசன மற்றும் குடிநீர் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று வலியுறுத்தி 40 ஆண்டுகளாக விவசாயிகள் போராடி வருகின்றனர்.


இந்த பிரச்சினைக்கு உடனடியாக தீர்வுகாண வேண்டும். அதேபோல, மந்தமாக நடந்து வரும் காவிரிவைகை குண்டாறு திட்டத்துக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்து, அத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். விவசாயப் பொருட்களை அரசே மொத்த கொள்முதல் செய்து, விநியோகம் செய்ய வேண்டும்.

குறைந்தபட்ட ஆதார விலையை சட்டமாக்க வேண்டும். விவசாயிகளை பாதிக்கும் மின் மசோதாவைத் திரும்பப் பெற வேண்டும். இந்த கோரிக்கைகள் தொடர்பாக கிராமப் பஞ்சாயத்துகளிலும், வட்டாரத் தலைநகர்களிலும் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் அரசாங்கத்தின் காதுகளுக்கு எட்டாததால், மாநிலத் தலைநகரில் பேரணியை முன்னெடுத்துள்ளோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ராமநாதபுரம் மாவட்டத்தில் நாதக நிர்வாகிகள் கூண்டோடு விலகல்; புதிய கட்சி துவக்கம்

ராமேஸ்வரம், டிச.11-

ராமநாதபுரம் மாவட்ட நாம் தமிழர் கட்சியில் கடும் கோஷ்டி மோதல் நிலவி வந்தது. இந்நிலையில் முன்னாள் மாவட்டச் செயலாளர் கண் இளங்கோ, மாநில ஒருங்கிணைப்பாளர் சத்யா, மாநில இளைஞர் பாசறை செயலாளர்கள் தீன், நம்புகுமார், மாநில மாணவர் பாசறை செயலாளர்கள் சங்கீதா, பாலு, மாநில மகளிர் பாசறை செயலாளர் ஜெயா, மாநில வீரத்தமிழர் முன்னணி பொறுப்பாளர் செல்வம் உள்ளிட்ட 45க்கும் மேற்பட்டோர் நேற்று முன்தினம் கூண்டோடு கட்சியில் இருந்து விலகினர்.



இவர்கள் மேதகு நாம் தமிழர் கட்சி என்ற பெயரில் புதிய கட்சியை தொடங்கினர். இதற்கான கூட்டம் ராமேஸ்வரத்தில் நேற்று நடைபெற்றது. இதில் புதிய கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளராக கண் இளங்கோ, பொதுச்செயலாளராக மாரியம்மாள், பொருளாளராக காதர், செய்தித் தொடர்பாளராக நியூமன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

ராமநாதபுரம் மாவட்ட நாதக உட்கட்சி பூசலால் நிர்வாகிகள் கூண்டோடு விலகி புதிய கட்சி துவங்கிய சம்பவம் சீமானுக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.


# வாக்கு திருட்டு தேச விரோத செயல் மக்களவையில் ராகுல் காந்தி குற்றச்சாட்டு

புதுடெல்லி, டிச.11-

எஸ்ஐஆர் குறித்து மக்களவையில் நேற்று சிறப்பு விவாதம் தொடங்கியது. அப்போது வாக்கு திருட்டு மிகப்பெரிய தேச விரோத செயல் என்று எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டினார். நாடாளுமன்ற மக்களவையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணி (எஸ்ஐஆர்) தொடர்பான விவாதம் நேற்று தொடங்கியது.

காங்கிரஸ் எம்பி மணீஷ் திவாரி விவாதத்தை தொடங்கி வைத்து பேசும்போது, "தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிக்கும் குழுவில் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியை சேர்க்க வேண்டும்.

எஸ்ஐஆர் பணியை மேற்கொள்ள சட்டப்பூர்வமாக எந்த அனுமதியும் இல்லை. இதனை உடனடியாக நிறுத்த வேண்டும். மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மீதான சந்தேகங்கள் அதிகரித்து வருகின்றன. எனவே மீண்டும் வாக்குச்சீட்டு முறையில் தேர்தலை நடத்த வேண்டும்''



என்று வலியுறுத்தினார்.

சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் பேசும்போது, "காங்கிரஸ் எம்பி மணீஷ் திவாரியின் கருத்துகளை ஆமோதிக்கிறேன். அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளில்கூட வாக்குச்சீட்டு முறையில் தேர்தல் நடைபெறுகிறது. இந்தியாவிலும் வாக்குச்சீட்டு முறையில் தேர்தலை நடத்த வேண்டும்'' என்றார்.

பாஜக எம்பி சஞ்சய் ஜெய்ஸ்வால் பேசும்போது, "கடந்த 1947ம் ஆண்டில் முதல்முறையாக வாக்கு திருட்டு நடைபெற்றது. அப்போது ஒட்டுமொத்த காங்கிரஸ் கமிட்டியும் சர்தார் படேலுக்கு ஆதரவாக இருந்தது. ஆனால் நேரு பிரதமராக நியமிக்கப்பட்டார். இதைவிட பெரிய வாக்கு திருட்டு எதுவுமே இருக்காது'' என்றார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பேசும்போது, "பிரதமரும், மத்திய உள்துறை அமைச்சரும் இணைந்து தலைமைத் தேர்தல் ஆணையரை தேர்வு செய்கின்றனர். உலகில் வேறு எந்த பிரதமரும் இது போன்று செயல்படுவது கிடையாது. அனைத்து அரசு அமைப்புகளையும் ஆர்எஸ்எஸ் கைப்பற்றி வருகிறது'' என்று குற்றம் சாட்டினார்.

இதையடுத்து, நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு கூறும்போது, "எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக மட்டுமே பேச வேண்டும். எந்தவொரு அமைப்பையும் குற்றம் சாட்டக்கூடாது'' என்றார்.

பாஜக எம்பிக்கள் அனைவரும் ராகுல் காந்தியின் கருத்துக்கு ஆட்சேபம் தெரிவித்து கோஷமிட்டனர். இதற்கு நடுவே ராகுல் காந்தி பேசும்போது, ''தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிக்கும் குழுவில் இருந்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியை நீக்கியது ஏன்? தற்போது தலைமைத் தேர்தல் ஆணையரை நியமிக்கும் குழுவில் பிரதமர், மத்திய உள்துறை அமைச்சர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் மட்டுமே உள்ளனர்.

பிரதமரும் மத்திய உள்துறை அமைச்சரும் இணைந்து தலைமைத் தேர்தல் ஆணையரை தேர்வு செய்கின்றனர். மக்களவை எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்கு மதிப்பு கிடையாது. தலைமைத் தேர்தல் ஆணையரை மத்திய அரசு இயக்குவது எந்த வகையில் நியாயம் ஆகும்? தேர்தல் நிறைவடைந்த உடன் 45 நாட்களுக்கு பிறகு சிசிடிவி பதிவுகள் அழிக்கப்படுகிறது.

இதற்கு காரணம் என்ன? எனது கேள்விகளுக்கு மத்திய அரசு பதில் அளிக்க வேண்டும். தேர்தலின்போது வாக்கு திருட்டு நடைபெறுகிறது. இது மிகப்பெரிய தேச விரோத செயல். தேர்தல் ஆணையத்தை சீர்குலைத்து இந்திய ஜனநாயகத்தை பாஜக அரசு கேள்விக்குறியாக்கி வருகிறது. இவ்வாறு ராகுல் பேசினார்.



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஸ்ரீ தர்ம சாஸ்தா ஆலயத்தின் 53 ம் ஆண்டு உற்சவவிழா வருகிற டிசம்பர் ( 16, 17, 18.) (செவ்வாய், புதன், வியாழன்) ஆகிய மூன்று நாட்கள் திருவிழா நடை பெற இருக்கிறது. ஸ்ரீ தர்ம சாஸ்தா ஆலயத்தின் 53 வது உற்சவ பெருவிழா நடைபெறுவதை முன்னிட்டு நேற்று முகூர்த்தக்கால் நடும் நிகழ்ச்சிகோவில் நிர்வாகி ஏ.எல். சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது.இதில் ஐயப்ப முருக பக்தர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# யுனெஸ்கோவின் கலாச்சார பாரம்பரியப் பட்டியலில் இடம்பெற்ற தீபாவளி: பிரதமர் மோடி வரவேற்பு

சென்னை: டிச.11-

யுனெஸ்கோவின் பாரம்பரியப் பட்டியலில் தீபாவளிப் பணிடிகை சேர்க்கப்பட்டதற்கு பிரதமர் நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.



யுனெஸ்கோ அமைப்பின் கலாச்சார பாரம்பரிய பட்டியலில் தீபாவளி பண்டிகை சேர்க்கப்பட்டுள்ளது. டெல்லியில் நடைபெற்ற யுனெஸ்கோவின் கூட்டத்தில், யுனெஸ்கோவின் கலாசார பாரம்பரிய பட்டியலில் தீபாவளிப் பண்டிகை சேர்க்கப்பட்டுள்ளதாக மத்திய கலாசாரத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் அறிவித்தார்.

இதனை வரவேற்று பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், "இந்தியாவிலும் உலகெங்கிலும் உள்ள மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்.

எங்களைப் பொறுத்தவரை, தீபாவளி நமது கலாச்சாரம் மற்றும் வாழ்வியலுடன் மிகவும் நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது. இது நமது நாகரிகத்தின் ஆன்மா. இது வெளிச்சத்தையும், நீதியையும் வெளிப்படுத்துகிறது.

யுனெஸ்கோவின் பாரம்பரியப் பட்டியலில் தீபாவளி சேர்க்கப்படுவது இத்திருவிழாவின் உலகளாவிய பிரபலத்துக்கு மேலும் பங்களிக்கும். ஸ்ரீ ராமரின் கொள்கைகள் நம்மை என்றென்றும் வழிநடத்தட்டும்." எனத் தெரிவித்துள்ளார்

# குறும்படங்களும் ஆவணப்படங்களும் சமுதாயச் சிந்தனைகளை அனைத்து தரப்பினரிடமும் கொண்டு சேர்க்கின்றன பல்கலை துணைவேந்தர் என்.பஞ்சநதம் பேச்சு

சின்னாளபட்டி டிச.11

காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மற்றும் மதுரை மறுபக்கம் ஆவணப்பட இயக்கம் சார்பில் நடத்தப்பெற்ற 27வது சர்வதேச திரைப்படத் திருவிழாவில் குறும்படங்களும், ஆவணப்படங்களும் சமுதாயச் சிந்தனைகளை அனைத்து தரப்பினரிடமும் கொண்டு சேர்க்கின்றன என்று, காந்திகிராம கிராமியப் பல்கலையில் நடைபெற்ற தமிழ்த்துறையின் திரைப்பட விழாவில் பல்கலை துணைவேந்தர் என்.பஞ்சநதம் பேசினார்.




காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை மற்றும் மதுரை மறுபக்கம் ஆவணப்பட இயக்கம் சார்பில் நடத்தப்பெற்ற 27வது சர்வதேச திரைப்படத் திருவிழா தமிழ்த்துறையின் குறள் அரங்கத்தில் நடைபெற்றது. விழவிற்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர் என்.பஞ்சநதம் தலைமை தாங்கினார். விழாவில் வரவேற்புரை ஆற்;றிய தமிழ்த்துறைத் தலைவரும் விழா ஒருங்கிணைப்பாளருமான பேராசிரியர் பா.ஆனந்தகுமார் "ஆவணப்படங்களும் குறும்படங்களும் வணிக ரீதியான, கேளிக்கை சார்ந்த திரைப்படங்களின் மாற்றாக அமைந்து கலை மூலம் சிந்தனையை வளர்க்கும் கருவிகளாகத் திகழ்கின்றன. மேலும் மாணவர்களுக்கு கலை குறித்தான சரியான புரிதலை ஏற்படுத்துவதோடு சமூக அக்கறை கொண்ட களம் இயக்குநர்கள் உருவாவதற்கும் இதுபோன்ற திரைப்பட விழாக்கள் களம் அமைத்து கொடுக்கின்றன" என்றார். மறுபக்கம் திரைப்பட அமைப்பின் நிறுவனரும் திரைப்பட விழாவின் இயக்குநருமான ஆர்.பி.அமுதன் திரைப்பட விழாவின் நிகழ்முறை குறித்து எடுத்துரைத்தார். தமிழ், இந்திய மொழிகள் மற்றும் கிராமியக் கலைகள் புலமுதன்மையர், பேராசிரியர் எஸ்.ஷாஜி விழாவில் வாழ்த்துரை வழங்கினார். விழா தலைமையுரை ஆற்றிய பல்கலை துணைவேந்தர் ந.பஞ்சநதம் அவர்கள் "இனிவரும் காலங்களில் மாணவர்கள் பட்டப்படிப்பினால் மட்டும் முன்னேற முடியாது. தங்களுக்கென தனித்திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். குறும்படங்களும் ஆவணப்படங்களும் சமுதாயச் சிந்தனைகளை அனைத்து தரப்பினரிடமும் கொண்டு சேர்க்கும் பணியினை மேற்கொள்கின்றன. அந்த வகையில் இதுபோன்ற திரைப்படத்திருவிழாக்கள் தொடர்ந்து நடத்தப்படுவதோடு பல்வேறு கல்லூரி மாணவர்களுக்கிடையிலான குறும்பட, ஆவணப்பட போட்டி எனும் நிலையிலும் நிழக்ச்;சி முன்னெடுக்கப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். போர்ப்பறவைகள் குறும்பட இயக்குநர் கைலாஷ்பாரதி, கயிற்று நுனி ஆவணப்பட இயக்குநர் அரவிந்த், எழுத்தாளர் சுப்ரபாரதிமணியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். விழாவில் பல்வேறு மொழிகளைச் சேர்ந்த மற்றும் சமுதாயச் சிக்கல்களை மையப்படுத்திய போர்ப்பறவைகள் (தமிழ்), கயிற்றுநுனி (தமிழ்), குலாம் (மராட்டி), தி டெய்லி பிரட்(கஷ்மீரி), தி பர்ஸ்ட் லெசன்(ருசியா), தி ஆப்பிள் பிக்கர்ஸ் சன்(இந்தி), ஸீ மீ வென் யூ லீவ் (மலையாளம்) உள்ளிட்ட குறும்படங்கள் மற்றும் ஆவணப்படங்கள் திரையிடப்பட்டன. அதன் பின்னர் படங்கள் குறித்தான மாணவர்களின் கலந்துரையாடல் நிகழ்ந்தது. தமிழ் மற்றும் இந்தித் துறையைச் சேர்ந்த மாணவர்கள், ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் பார்வையாளராகக் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# அனில் அம்பானி மகன் மீது சிபிஐ வழக்கு பதிவு

புதுடெல்லி: டிச.11-

தொழிலதிபர் அனில் அம்பானி தலைமையிலான நிறுவனங்கள் பல வங்கிகளில் பெற்ற கடனை திருப்பிச் செலுத்தவில்லை என வழக்குகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், ரிலையன்ஸ் ஹோம் பைனான்ஸ் நிறுவனம் (ஆர்எச்எப்எல்), யூனியன் பாங்க் ஆப் இந்தியாவில் (முன்பு ஆந்திரா வங்கி) வாங்கிய ரூ.228 கோடி கடனை முறையாக திருப்பிச் செலுத்தவில்லை என கூறப்படுகிறது.



இதையடுத்து, கடந்த 2019ம் ஆண்டு செப்டம்பர் 30ம் தேதி, இந்தக் கடனை வாராக் கடனாக வகைப்படுத்தியது. மேலும் இது தொடர்பாக யூனியன் வங்கி சார்பில் சிபிஐயிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் சிபிஐ மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையில், வங்கியில் பெற்ற கடனை உரிய நோக்கத்துக்காக பயன்படுத்தாமல் வேறு வகையில் முறைகேடாக பயன்படுத்தியது தெரியவந்தது.

இதையடுத்து, ஆர்எச்எப்எல், அதன் இயக்குநர்களான அனில் அம்பானி மகன் ஜெய் அன்மோல், ரவீந்திரா சரத் சுதாகர் ஆகியோர் மீது சிபிஐ வழக்கு பதிவு செய்துள்ளது.

# "பாஜகவின் கலவர அரசியலுக்கு துணையாக பழனிசாமி..." அதிமுக பொதுக்குழு தீர்மானம் மீது திமுக விமர்சனம்

சென்னை: டிச.11-

எடப்பாடி பழனிசாமியின் பயத்தை போக்க போடப்பட்ட மேக்அப்தான் பொதுக்குழு என்றும் அதிமுக பொதுக்குழுவில், அதிகாரம் என்ற போலி சட்டையை பழனிசாமிக்கு மாட்டியிருக்கிறார்கள் எனவும் திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நெல் கொள்முதல் ஈரப்பத அளவை உயர்த்துங்கள் என்று அதிமுக பொதுக்குழுவில் ஒன்றிய அரசுக்கு நேரடியாக ஒரு கோரிக்கை வைப்பதற்குகூட போலி விவசாயி எடப்பாடி பழனிசாமிக்கு துணிவில்லை. 10 தோல்வி கண்ட பழனிசாமிக்கு 2026 தேர்தலிலும் படுதோல்வியை பரிசாக தருவார்கள்.

ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அண்ணா திமுக அமித்ஷா திமுகவாக மாறி விட்டதை மறைக்க முயற்சித்தாலும் அதிமுக பொதுக்குழு தீர்மானங்கள், பாஜகவின் அடிமை பழனிசாமி என்பதை தமிழ்நாட்டு மக்களுக்கு சொல்லும் வகையிலேயே உள்ளன.

"கூட்டணிக்கு அதிமுகதான் தலைமை; கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் குறித்து முடிவெடுக்க எடப்பாடி பழனிசாமிக்கு முழு அதிகாரம்" என்ற தீர்மானம் பார்ப்பதற்கு எடப்பாடி பழனிசாமியை அதிமுகவினர் மத்தியில் டான்? போல காட்டுமே தவிர, அவர் டம்மி என்பது மக்களுக்கும் பாஜகவுக்கும் நன்றாகவே தெரியும்.

அதிமுக பொதுக்குழு நடப்பதற்கு இரண்டு நாள் முன்புகூட குஜராத்தில் பேசிய அமித் ஷா, ''பிஹாரைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலும் பாஜக கூட்டணி ஆட்சி அமைக்கும்'' என்றார். "மாப்பிள்ளை அவர்தான், ஆனால் அவர் போட்டிருக்கும் சட்டை என்னுடையது" என்ற வசனம் போல மாப்பிள்ளை பழனிசாமிதான். ஆனால், அவருக்கு எந்த அதிகாரமும் கிடையாது என்பதுதான் அமித் ஷா சொன்ன வார்த்தையின் அர்த்தம். ஆனால், அதிமுக பொதுக்குழுவில், அதிகாரம் என்ற போலி சட்டையை பழனிசாமிக்கு மாட்டியிருக்கிறார்கள்.

அமித் ஷா அழைப்பின் பேரிலேயே டெல்லி சென்ற எடப்பாடி பழனிசாமி கார்கள் மாறி அமித் ஷாவை சந்தித்தும், முகமூடி அணிந்து வெளி வந்ததையும் தமிழ்நாட்டு மக்கள் பார்த்தார்கள். அந்த அமித் ஷா சொல்வதை மீறி எதையுமே எடப்பாடி பழனிசாமியால் செய்ய முடியாது என்பது அதிமுகவினருக்கே நன்கு தெரியும். எடப்பாடி பழனிசாமியின் பயத்தைப் போக்க போடப்பட்ட மேக்அப்தான் பொதுக்குழு.

மெகா கூட்டணி அமைப்பதாக கூறிய எடப்பாடி பழனிசாமியை நம்பி எந்தக் கட்சியும் வர தயாராக இல்லை; 10 தோல்வி கண்ட பழனிசாமிக்கு எந்த ஆளுமையும் இல்லை. மக்கள் செல்வாக்கும் கிடையாது என்பது தெள்ளத்தெளிவாக உணர்ந்த அமித் ஷா, எடப்பாடி பழனிசாமியை மிரட்டி அடிபணிய வைத்து கூட்டணியை அவரே அறிவித்தார் என்பதுதானே நிஜம்.

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டவர்கள் டெல்லி சென்று அமித் ஷாவை சந்தித்துவிட்டு வருகிறார்கள். அதற்காக அமித் ஷாவை கண்டித்து ஒருவார்த்தை கூட பேசாத பழனிசாமிக்குதான் கூட்டணியில் இடம்பெறும் கட்சிகள் குறித்து முடிவெடுக்கும் முழு அதிகாரம் என்பது மிக சிறந்த நகைச்சுவை.

நெல் கொள்முதல் ஈரப்பத அளவை 17 விழுக்காட்டில் இருந்து 22 சதவீதமாக அதிகரிக்க வேண்டும் என்ற



தமிழ்நாட்டின் கோரிக்கையை ஒன்றிய பாஜக நிராகரித்துவிட்ட விவகாரத்தில், ஒன்றிய அரசைக் கண்டிக்க தைரியம் இல்லாத பழனிசாமி, திமுக அரசைக் கண்டித்திருப்பது பச்சைசத்துண்டு அணிந்துகொண்டு பச்சைதுரோகம் செய்யும் போலி விவசாயி பழனிசாமி என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்திருக்கிறார்.

நெல் கொள்முதல் ஈரப்பத அளவை உயர்த்துங்கள் என்று அதிமுக பொதுக்குழுவில் ஒன்றிய அரசுக்கு நேரடியாக ஒரு கோரிக்கை வைப்பதற்குகூட அவருக்கு துணிவில்லை.

உண்மையான விவசாயியாக இருந்தால் பிரதமரை டெல்லி சென்று சந்தித்து 22 சதவீதம் வரை உள்ள நெல்லையும் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கினால்தான் கூட்டணியில் தொடருவோம் என நிபந்தனை விதிக்க தைரியம் இருக்கிறதா?

கோவை, மதுரை நகரங்களின் மெட்ரோ திட்டங்களை ரத்து செய்த மோடி அரசை கண்டிப்பதற்கு பதில், ஒன்றிய பாஜக அரசு கூறிய மொக்கையான காரணத்தையே அதிமுக பொதுக்குழு தீர்மானத்திலும் நியாயப்படுத்தி கோவை, மதுரை மக்களுக்கு பெரும் துரோகத்தை செய்திருக்கிறார்கள்.

திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு அடைந்துவரும் வளர்ச்சியை தினந்தோறும் பார்த்து வயிற்றெரிச்சலில் தவிக்கும் பழனிசாமி, போகின்ற இடங்களிலெல்லாம் புலம்புவதை வாடிக்கையாக வைத்திருந்தார். அதையே அதிமுக பொதுக்குழுவின் தீர்மானங்களாகவும் வடித்துள்ளார்.

தமிழ்நாட்டின் கடன் சுமை கட்டுக்குள் இருப்பதாக சிஏஜி வெளியிட்ட அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் கடன் சுமை அதிகரித்துவிட்டதாக அதிமுக பொதுக்குழுவில் அவதூறு பரப்பப்பட்டுள்ளது.

2011ம் ஆண்டு திமுக ஆட்சி நிறைவு பெறும்போது தமிழ்நாட்டின் மொத்தக் கடன் 1,01,349 கோடி ரூபாய்தான். 10 ஆண்டுகால அதிமுக ஆட்சி நிறைவடையும்போது 2021 ம் ஆண்டில் தமிழ் நாட்டின் கடன் 4,80,300 கோடி ரூபாய். அதாவது 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் கடன் சுமார் 5 மடங்கு அதாவது கிட்டதட்ட 500 சதவீதம் அதிகரித்துள்ளது. அதே நேரம் திமுக ஆட்சியில் தற்போது 9 லட்சத்து 20 ஆயிரம் கோடி அளவிற்கு கடன் இருந்தாலும் 2021ல் திமுக ஆட்சிக்கு வந்ததிலிருந்து 93 சதவீதம் அளவிற்கே கடன் உயர்ந்துள்ளது.

ஒரு மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியான ஜிஎஸ்டிபியை ஒப்பிடும்போது கடன் அளவு எவ்வளவு என்பதுதான் கடன் சுமையை தீர்மானிக்கும் காரணி. அந்த வகையில் தமிழ்நாட்டின் ஞ்ணிறிஜி ஜிளி நிஷிஞ்றி ஸிகி ஜிமிளி 26.4 சதவீதம்தான். தமிழ்நாடு நிதி பொறுப்புச் சட்டம் 2003 நிர்ணயித்த கடன் வரம்பைவிட குறைவான அளவில்தான் தமிழ்நாட்டின் கடன் அளவு உள்ளது.

"முதலீடுகள் இல்லை, நிறுவனங்கள் இடம் பெயர்கின்றன, வேலை வாய்ப்பு இல்லை, ஏமாற்றும் புள்ளி விவரங்கள்" என பொத்தாம் பொதுவாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிய அதிமுக, தனது ஆட்சிக்காலத்தில் இவ்வளவு முதலீடுகள் ஈர்க்கப்பட்டன; அதிலிருந்து திமுக ஆட்சியில் இவ்வளவு கோடி குறைவாக உள்ளது.

அதிமுக ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட இந்த நிறுவனம் தற்போது வேறு மாநிலத்திற்கு சென்று விட்டது, அதிமுக ஆட்சியில் இத்தனை லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கினோம்; தற்போது அதைவிட குறைந்த வேலை வாய்ப்புகளே உருவாக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டு கூறியிருந்தால் முதலீடு ஈர்ப்பு, தொழில் வளர்ச்சி விஷயத்தில் அதிமுக ஆட்சியின் யோக்கியதை தெரிந்துவிடும் என்பதால் பொத்தாம் பொதுவான குற்றச்சாட்டை கூறியிருக்கிறது அதிமுக.

2016 முதல் 2021 வரையிலான அதிமுக ஆட்சியில் 15,543 கோடி ரூபாய் முதலீட்டில் 10,316 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளித்திடும் 21 தொழிற்சாலைகளுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு; அவற்றுள் 12 தொழிற்சாலைகள் மட்டுமே தொடங்கப்பட்டன. ஆனால், திராவிட மாடல் ஆட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 9.74 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டு 31 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த முதலீடு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் முதல் கட்டமாக 46 தொழிற்சாலைகள் தங்களது உற்பத்தியை தொடங்கிவிட்டன. அதனால்தான் தமிழ்நாடு கடந்த 14 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 11.19% இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை அடைந்து இந்தியாவில் முதன்மை மாநிலமாக திகழ்கிறது.

இந்த வளர்ச்சியை பழனிச்சாமியால் பொறுத்துக் கொள்ள முடியாமல், ஒன்றிய பாஜக அரசு வழங்கிய புள்ளி விவரத்தையே பொய்யான புள்ளி விவரம் என்று கூறியுள்ளார்.

திருப்பரங்குன்றம் கார்த்திகை தீபம் விவகாரத்தில் நீதித்துறையின் மதச்சார்பின்மைக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் அடம்பிடிக்கும் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனுக்கு எதிராக திமுக கொண்டு வந்த கண்டனத் தீர்மானத்தை வட மாநிலங்களைச் சேர்ந்த எம்.பிக்கள் உள்பட 120 மக்களவை எம்.பிக்கள் ஆதரித்துள்ளனர்.

ஆனால் மற்ற மாநிலங்களில் மதக் கலவரம் செய்தே ஆட்சியை மாற்ற பாஜக முயற்சி செய்து பலனடைந்ததால் தமிழ்நாட்டிலும் அந்த பலனை அறுவடை செய்யலாம் என்ற நப்பாசையில் பழனிசாமி பாஜகவின் கலவர அரசியலுக்கு துணை போகும் வகையில் அதிமுக பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்.

வழக்கம்போல் உச்சிப் பிள்ளையார் கோயில் அருகே தீபத்தூணில் தீபம் ஏற்றப்பட்டது; தீபம் ஏற்றி விட்டதை மறைத்து, தீபமே ஏற்ற அனுமதி மறுக்கிறது திமுக அரசு என்று அவதூறு பரப்பும் மதவெறி கும்பலுக்கும் அவர்களுக்கு துணையாக இருக்கும் பழனிசாமிக்கும் மதசார்பின்மைக்கு முன்மாதிரியாக திகழும் தமிழ்நாட்டு மக்கள் 2026 தேர்தலில் பாடம் புகட்டுவார்கள்.

திமுக அளித்த 505 வாக்குறுதிகளில் 364 வாக்குறுதிகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டுவிட்டது. 40 திட்டங்கள் பரிசீலனையில் உள்ளன. மொத்தமாக 404 திட்டங்கள் அரசின் செயல்பாட்டில் உள்ளன.

37 திட்டங்கள் ஒன்றிய அரசின் நிதி பங்களிப்பு இல்லாமல் நிலுவையில் உள்ளன. 64 திட்டங்கள் மட்டுமே இன்னும் அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளாத திட்டங்களாக உள்ளன.

தேர்தல் வாக்குறுதியாக சொல்லப்படாத இல்லம் தேடி கல்வி, காலை உணவு திட்டம், நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ் புதல்வன், இன்னுயிர் காக்கும் 48 திட்டம் போன்ற திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி சொல்லியது மட்டுமல்ல சொல்லாததையும் செய்யும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என தமிழ்நாட்டு மக்கள் பாராட்டுவதாலேயே எடப்பாடி பழனிசாமி பொய்யையும் அவதூறையும் பரப்பி ஆதாய அடைய முயற்சிக்கிறார்.

பாஜகவின் மதவெறி கொள்கைக்கு எதிரியாக இருப்பது திமுக மட்டுமல்ல தமிழ்நாடே என்பதால் தமிழ்நாட்டுக்கு துரோகத்தையும் வஞ்சகத்தையுமே மட்டுமே ஒன்றிய பாஜக அரசு துணிந்து செய்கிறது. அப்படியிருந்தும் பாஜகவுடன் கூட்டணிவைத்து எட்டப்பன் வேலைபார்க்கும் எடப்பாடி பழனிசாயின் புலம்பலை தமிழ்நாட்டு மக்கள் நிராகரிப்பார்கள். 10 தோல்வி கண்ட பழனிசாமிக்கு 2026 தேர்தலிலும் படுதோல்வியை பரிசாக தருவார்கள்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000